[1987 ஏப்ரல் 24

இராமேஸ்வரத்திலிருந்து தனுஷ்கோடி வரை விசைப்படகு.

485—(*வினா எண். 11180) திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமேஸ்வரத்திலிருந்து தனுஷ்கோடிக்கு விசைப் படகு விடப்படுகிறதா?

(ஆ) ஆம், எனில், அதன் விபரம் என்ன ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு தலைவரவர்களே, இராமேஸ்வரத்திலிருந்து தனுஷ்கோடிக்குச் செல்வதற்கு பாதைகள் சரியாக இல்லாத காரணத்தாலும் கப்பல் போக்குவரத்து இல்லாத காரணத்தாலும் விசைப்படகுகள் செல்ல அனுமதியளிக்க அரசு முயற்சி செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவரவர்களே, 1985 ஆம் ஆண்டு இந்தக் கப்பல் போக்குவரத்து நிறுத்தப்பட்டு விட்ட காரணத்தால் இந்தக் கப்பல் போக்குவரத்திற்கு உதவியாகப் பயன்படுத்தப்பட்டு வந்த விசைப்படகுகள் நிறுத்தப் பட்டன. அதன் காரணமாக விசைப் படகுகளில் தொழில் புரிந்தவர்களுக்கு வேலையில்லாத் திண்டாட்டம் ஏற்பட்டது. அவர்களே இந்தப் போக்குவரத்திற்கு மனு செய்தபோது அந்த விசைப் படகுகளை இராமேஸ்வரத்திலிருந்து இயக்கலாம் என்று அனுமதி அளிக்கப்பட்டது. ஆனால், அதற்குப் பின்னாலே அந்தப் படகுகள் கடலிலே ஓட தகுதி உள்ளவைதானா என்று பார்க்க வேண்டும் ; படகுகளுக்கு தகுதி சான்று பெற வேண்டும்; சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் படகுகளைக் காட்ட வேண்டும் என்று கேட்டுக் கொள்ளப்பட்டார்கள். அவர்கள் படகுகளைக் காட்டுகிறபோது சில குறைபாடுகளைச் சுட்டிக் காட்டி, அந்தக் குறைபாடுகளை நிவர்த்தி செய்துவிட்டு மீண்டும் கொண்டுவந்து காட்டுங்கள் என்று சொல்லி அனுப்பியிருக்கிறார்கள், இன்னும் அவர்கள்கொண்டுவந்து காட்டவில்லை என்பதால் தடை செய்யப் பட்டிருக்கிறது.

திரு. என். எஸ். வி. சித்தன் : தலைவரவர்களே, தனியாருக்கு நாம் உரிமம் கொடுத்து, அவர்கள் முறையாக விசைப் படகுகளை ஓட்டுகின்ற வாய்ப்பு இல்லாத காரணத்தால் அங்கே அரசாங்கமே விசைப் படகுகளை விட முயற்சி செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

1987 ஏப்ரல் 24]

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவரவர்களே, சின்ன சின்ன இடங்களில் இப்படிப்பட்ட பொறுப்புகளையும் அரசாங்கம் எடுத்துக் கொள்ளுகிறபோது நடைமுறையில் பல சிக்கல்கள் ஏற்பட வாய்ப்பு இருக்கிறது. எனவே இப்படிப்பட்ட சின்ன சின்ன இடங்களில் படகுகளை ஓட்ட தனியாரிடம் விடுவது தான் சரியாக இருக்கும். இப்போது கூட சம்பந்தப்பட்ட அதிகாரிகளை வைத்து, அவர்கள் ஏன் அந்த படகுகளைக் கொண்டுவந்து காட்டவில்லை; என்ன காரணம் என்பதைக் கண்டறிந்து, மீண்டும் அவர்கள் அந்த படகுகளை இயக்குவதற்குத் தூண்டுதலாக சில நடவடிக்கைகளை எடுக்க ஏற்பாடு செய்யலாம்.

சேரன் போக்குவரத்துக் கழகத்தைப் பிரித்தல்.

486—(*வினா எண். 11738) **திரு. கே. உச்சி :** மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன் போக்குவரத்து கழகத்தை பிரித்து நீலகிரி மாவட்டம், உதகையை தலைமையகமாகக் கொண்டு நீலமலை போக்குவரத்துக் கழகம் ஏற்படுத்தும் செயற் குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறுவப்படும் ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

திரு. கே. உச்சி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டம் ஒரு பின்தங்கிய மாவட்டம், அங்கேயுள்ள பேருந்துகளைப் பொறுத்தவரையில் முழுமையாக தேசியமயமாக்கப்பட்ட பேருந்துகள் இருக்கின்ற ஒரு மாவட்டம், எனவே அங்கே தனியார் போட்டி என்பதே கிடையாது. ஆனால் தனியார் போட்டியுள்ள மாவட்டங்களில் எல்லாம் தனிப் போக்குவரத்துக் கழகங்கள் அமைத்து நடைபெற்று வரும்பே து நீலகிரி மாவட்டம் முழுமையாக தேசிய மயமாக்கப்பட்ட பேருந்துகளை உடைய மாவட்டமாக இருக்கின்ற காரணத்தால் அங்கே தனிப் போக்குவரத்துக் கழகம் ஏற்படுத்துவது குறித்து அரசு மறு பரிசீலனை செய்யுமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டம் பின்தங்கிய மாவட்டம் என்று சொன்னார்கள் அதை எப்படி ஏற்றுக் கொள்வது என்று தெரியவில்லை. நாமெல்லோரும் அங்குதான் போக விரும்புகிறோம். ஏறத்தாழ 289 பேருந்துகள் நீலகிரி மாவட்டத்தில் சேரன் போக்குவரத்துக் கழகத்தால் இயக்கப்பட்டு வருகிறது. சேரன் போக்குவரத்துக்